**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.52/2024**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | சுஜிதா (PW2) | | |
| Husband's Name | விவேக் | தொழில் | |
| Village | பள்ளிக்கரணை | | |
| Taluk | பள்ளிக்கரணை | Age | **38** |
| District | சென்னை மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of June 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். எனது தம்பி தனமோகன் திருப்பூரில் செல்போன் கடை வைத்து நடத்தி வந்தார். தேதி நினைவில்லை. கடந்த 2023ம் வருடம் ஒரு நாள் என் செல்போனிற்கு உறவினர் ரவிந்தீரன் என்பவர் போன் செய்து பூண்டி செல்லும் ரோட்டில் எனது தம்பி இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தபோது எதிரே வேகமாக வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாக தகவல் சொன்னார். நானும் என் அம்மாவும் எனது தம்பியை திருப்பூர் அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தபோது எனது தம்பி இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக லாரி டிரைவரின் மீது நடவடிக்கை எடுக்க பெருமாநல்லூர் காவல் நிலையம் சென்று எனது அம்மா புகார் கொடுத்தார். போலீசார் சவக்கிடங்கில் வைத்து விசாரணை செய்தபோது நான் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவத்தை நான் நேரில் தான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |